மாவட்ட செயலகம், மட்டக்களப்பு

2027ம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

மட்டக்களப்பு மாவட்ட செயலக மற்றும் அதனோடிணைந்த பிரதேச செயலகங்கள் பதினான்கிற்கும் மாவட்ட செயலாளரின் மேற்பார்வைக்குட்பட்ட ஏனைய அலுவலகங்களிற்கும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் சேவைகள் மற்றும் ஒப்பந்த வழங்கல் வகுதிகளின் கீழ் 2027 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொகுதி இல	பொருட்களின் விபரம்	தொகுதி இல	பொருட்களின் விபரம்
G – 1	காரியாலய தளபாடங்கள் (மரம், இரும்பு, பிளாஸ்டிக்கினால் ஆனவை)	G – 19	வளிச்சீராக்கிகள்
G – 2	காரியாலய இயந்திர உபகரணங்கள் (தட்டச்சு இயந்திரம், ரோணியோ இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், மவ்டி மீடியா புரொஜக்டர்)	G – 20	விவசாய பொருட்கள் / விவசாய உபகரணங்கள்
G – 3	அலுவலக காகிதாதிகளும், எழுதுகருவிகளும்	G – 21	விவசாய விதைகள், நடுகைப் பொருட்கள் உர வகைகள், விவசாய இரசாயனப் பொருட்கள்
G – 4	புத்தகங்களும், பருவ வெளியீடுகளும்	G – 22	சுய தொழில் உபகரணங்கள் (மேசன், தச்சன் போனற் தொழில்களுக்கான உபகரணங்கள்)
G – 5	கட்டடப் பொருட்கள்	G – 23	கால்நடைகளின் உணவுகள், மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்கள்
G – 6	பிறின்டர்கள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரங்களுக்கான ரோனர்களும் றிபன் வகைகளும்	G – 24	கால்நடைகள்
G – 7	மின் உதிரிகளும், பொருத்திகளும் மற்றும் வலைப்பின்னல்	G – 25	இரும்புப் பொருட்கள் (Hardware items)
G – 8	கணணி, மடிக் கணணிகள் மற்றும் கணணி உதிரிப்பாகங்களும், கணணி தொழில்நுட்ப உபகரணங்கள், கணணி பிரிண்டர்கள்	G – 26	மீன பிடி தொடர்பான உபகரணங்கள் (மீன்பிடி வலை, தோணி, மீன்பெட்டி மற்றும் GPS போன்றவை)
G – 9	சமயலறை பாத்திரங்கள் உட்பட சமயலறை பொருட்கள்	G – 27	இயந்திரம் மற்றும் மர உலோக வேலைகள்
G – 10	வீட்டு உபகரணங்களும் மின் பாவனை பொருட்களும்	G – 28	மாநாடு மற்றும் கூட்டங்களுக்கு உணவு வழங்குதல்
G – 11	புடவை, துணி வகைகள், சீருடைத்துணி வகைகள், கட்டில் விரிப்புக்கள் போன்றவை	G – 29	மின் பிறப்பாக்கிகள்.

G – 12	மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், மற்றும் வாகனம் தொடர்பான ஏனைய பொருட்கள்	G – 30	மழை அங்கிகள், வெளிக்களப் பாதணிகள், குடைகள், சப்பாத்துக்கள், அலுவலகப் பைகள், பாடசாலைப் பைகள் போன்றவை
G – 13	ரயர், ரியூப் மற்றும் வாகன பற்றரிகள்	G – 31	குழாய்களும் குழாய் பொருத்துக்களும்
G – 14	எரிபொருள் விநியோகம்	G – 32	பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி உற்பத்தி பொருட்கள்
G – 15	விளையாட்டு மற்றும் நலன்புரி தொடர்பான உபகரணங்கள்	G – 33	சட்டர் கேட்டின் (Shutter Curtain) வழங்கதலும் பொருத்துதலும்
G – 16	இசைக்கருவிகள்	G – 34	உணவு சிற்றூண்டி வகைகளும், பேக்கரி பொருட்களும்
G – 17	மருத்துவ உபகரணங்கள், மருந்து வகைகள் (மருந்துக் கடைகள்)	G – 35	பலசரக்கு பொருட்கள் மற்றும் முட்டை, இறைச்சி, மரக்கறி வகைகள்
G – 18	சோலார் முறைமை (Solar system)	G - 36	ஒலிபெருக்கி, L.E.D. wall மற்றும் தொடர்பு சாதனங்கள்

தொகுதி இல	சேவைகள் விபரம்.
S - 1	கடிதத்தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாதைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை, திகதி முத்திரை தயாரித்தல்
S – 2	அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் மற்றும் கதவு ஜன்னல் ஒட்டு வேலைகள் மற்றும் திருத்தம்
S – 3	அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், ரைப்ரைட்டர்கள், ரோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும்
S – 4	கணனிகள், பிரின்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும்.
S – 5	வளிச்சீராக்கிகள், குளிரூட்டிகள், மின் உபகரணங்கள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் மின் வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும்
S – 6	பாதுகாப்பு சேவைகள் வழங்குதல்
S – 7	சுத்திகரிப்பு சேவைகள் வழங்குதல், கட்டட தளபாடங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல்

S - 8	**வாகனம் பழுது பார்த்தல்** : இயந்திர, மின் இணைப்பு (Circuit)களை பழுது பார்த்தல், தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும், பெயின்ட் அடித்தலும், டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்களை பழுதுபார்த்தல், குளிரூட்டிகள் பொருத்துதலும் பழுது பார்த்தலும், (தேவைப்படும் உதிரிப்பாகங்களும் பிற பொருட்களும் வழங்குதல் அடங்கலாக)
S - 9	**வாகன பராமரித்தல்** : கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (Alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தலும், டயர் மாற்றம் செய்தலும் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். (தேவைப்படும் உதிரிப்பாகங்களும் பிற பொருட்களும் வழங்குதல் அடங்கலாக)
S - 10	வாகனங்கள் மற்றும் நிர்மாண சேவை இயந்திரங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கல்
S - 11	**ஏனைய சேவைகள்** - சமைத்த உணவு மற்றும் சிற்றூண்டி வழங்கல் மற்றும் மேலதிகமான சேவைகள்
S – 12	தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவைகள், வலைத்தள மேம்பாடு, ஆவணப்படம் எடுத்தல் மற்றும் புகைப்படம் எடுத்தல்
S – 13	மர வேலைகள் மற்றும் உலோக வேலைகள்
S - 14	கட்டட பிரிவிடுதலும், அலங்காரமும்
S - 15	கட்டட நிர்மாணம், புதுப்பித்தல், திருத்தம், பராமரிப்பு, மேம்படுத்தல் மற்றும் வீதி நிர்மாணம், திருத்தம், பராமரிப்பு, மேம்படுத்தல், கொங்கிரீற் வேலைகள்
S – 16	நிலத்தை தயார்படுத்தலும் அழகுபடுத்தலும்
S - 17	நீர் வழங்கல் சுத்திகரிப்பு மற்றும் குழாய் பொருத்துதலும் திருத்த வேலைகளும்
S - 18	வாகன காப்புறுதி சேவை
S - 19	தையல் வேலைகள், ஆடைகள், மற்றும் திரைச் சீலைகள்
S - 20	போட்டோ பிரதியெடுத்தல் சேவை
S – 21	வாகன இருக்கை, இருக்கை மேலுறைகள் மற்றும், குசன் வேலை தொடர்பான பொருத்துதல் சேவைகள். (திருத்தம் செய்தல் / புதியது பொருத்துதல்)

பகுதி II

ஒப்பந்தக்காரர்கள், வழங்குனர்களை பதிவு செய்து கொள்வதற்குரிய தகமைகள்.

01. CIDA நிறுவனத்தினால் நிருமாணதாரர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் ரூபா 20,000,000.00 (இருபது மில்லியன்) வரையிலான ஒப்பந்த வேலைகளின் பொருட்டு தம்மை பதிவு செய்து கொள்வதற்கு தகுதியுடையவர்களாவர்.

02. வழங்குனர்களாக பதிவு செய்து கொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

    a) வியாபாபர பதிவுச் சான்றிதழ் / கம்பனிப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி.
    b) CIDA பதிவு சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
    c) TIN பதிவ சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
    d) உணவு வழங்கல் சேவையாயின் குறித்த பகுதிக்குரிய PHI/MOH அலுவலகத்தில் இருந்து பெற்ற சானறிதழ்.

03. இவ் வழங்குனர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவு செய்தலானது 2027ம் ஆண்டுக்கு மட்டுமே செல்லுபடியாகும். விலைமனு கோரும் போது பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

04. விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்பட்ட தகவல்களில் பிழைகள் ஏதும் காணப்படுமாயின் அத்தகைய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

05. பெறப்படும் விண்ணப்பப் படிவத்தினை காரணமெதனையம் முன்வைக்காது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ மாவட்ட செயலாளருக்கு உரிமை உண்டு.

06. பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்கள் விலை மனு கோரப்படும் போது அதனை கருத்தில் கொள்ளாது விட்டாலோ அல்லது உரிய காலத்தினுள் பொருளினை வழங்க அல்லது வேலையினை நிறைவு செய்யாது விட்டாலோ அல்லது வழங்கப்பட்ட மாதிரி அல்லது நிபந்தனைகளுக்கு ஒத்துப்போகாமல் விட்டாலோ அத்தகைய வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்கள் எதிர்காலத்தில் விலைமனு கோரப்படும் போது கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

07. வியாபார பதிவு செய்யப்பட்ட தன்மை அல்லது அத்துடன் தொடர்புபட்ட பொருட்கள் சேவைகளுக்கே வழங்குநர்கள் தம்மை பதிவு செய்து கொள்ள முடியும்.

08. முடிவுத் திகதி வரை கிடைக்கும் விண்ணப்பங்கள் மட்டுமே முதலாவதாக வெளியிடப்படும் வழங்குனர் பட்டியலில் இடம்பெறும்.

விண்ணப்பப்படிவங்கள் 20.12.2026 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கீழ்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் மட்டக்களப்பு	தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிரதேச செயலகம் .....

குறிப்பு:- மாவட்டச் செயலகத்திற்குரிய விண்ணப்பங்கள் மாவட்டச் செயலக முகவரிக்கும், பிரதேச செயலகங்களுக்குரிய விண்ணப்பங்கள் உரிய பிரதேச செயலகங்களுக்கும் முகவரியிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.